# பொதுக்காலம் 19ஆம் வாரம் - ஞாயிறு

# முதல் ஆண்டு

## திருப்பலி முன்னுரை

நல்லதையே ஆண்டவர் அருள்வார் என்ற நம்பிக்கையோடு நலன்கள் நல்கும் நாயகனை நாடி வந்துள்ள உங்கள் அனைவரையும் பொதுக்காலத்தின் 19ஆம் ஞாயிறு திருப்பலிக் கொண்டாட்டத்திற்கு அன்போடு வரவேற்கின்றோம்.

துன்ப வேளையிலும் துணிச்சலை அளித்து, உடனிருந்து காத்த இறைவனுக்கு நன்றி சொல்லி, துயர் நீக்கும் இறைவன் மீது கொண்ட நம்பிக்கையில் ஐயம் கொண்ட தருணங்களுக்காக மனம் வருந்தி மன்னிப்பு வேண்டுவோம்.

இன்றைய வாசகங்கள் இறைவன் மீது நாம் கொள்ள வேண்டிய அசைக்க முடியாத நம்பிக்கையை வலியுறுத்துகின்றன.

அரசர்கள் முதல் நூலிலிருந்து எடுக்கப்பட்ட இன்றைய முதல் வாசகத்தில் இறைவாக்கினர் எலியா இயற்கையில் இறைவனைத் தேடுகின்றார். ஆண்டவர் மீது கொண்ட அச்சத்தினால் ஒவ்வொரு நிகழ்வின் போதும் குகையில் இருந்தவாறே இறைவனைத் தேடுகின்றார். இறைவனோ ஆர்ப்பாட்டம் இல்லாத மெல்லிய ஒலியின் மூலமாகவே தன்னை வெளிப்படுத்துகின்றார். இறைவனின் குரல் கேட்க துணிச்சலோடு குகையிலிருந்து வெளியே வருகின்றார் எலியா.

இன்றைய திருப்பாடலில் தாவீது அரசர் ஆண்டவரின் பேரன்பையும், மீட்பையும் வேண்டுகிறார். ஆண்டவரின் பேரன்பு நம் மேல் இருக்கும் போது அவர் நமக்கு நிறைவாழ்வை வாக்களிக்கின்றார் என்பதையும் எடுத்துரைக்கின்றார்.

இன்றைய இரண்டாம் வாசகத்தில் திருத்தூதர் பவுல், கடவுள் தேர்ந்து கொண்ட இஸ்ரயேல் மக்களின் மீட்புக்காக கிறிஸ்துவைப் பிரிந்து சாபத்துக்கு உள்ளாகக் கூடத் தயங்கவில்லை எனக் கூறுகின்றார். இந்த துணிச்சலை அவர் கிறிஸ்துவிடமிருந்தே பெற்றுக் கொண்டார். வாழ்வது நானல்ல; என்னில் கிறிஸ்துவே வாழ்கிறார் என்று சான்றும் பகர்கிறார்.

இன்றைய நற்செய்தி வாசகத்தில், ஆண்டவர் இயேசு கடல் மீது நடந்து வந்த நிகழ்வு எடுத்துக்காட்டப்படுகிறது. தன்னுடைய இறைவேண்டலை தனியே சென்று முடித்த இயேசு, கடல் மீது நடந்து வந்து தன்னுடைய சீடர்களை சந்திக்கின்றார். அச்சம் கொண்டவர்களை துணிவோடு இருக்க அறிவுறுத்துகின்றார். தன்னோடு கடல் மீது நடந்து வர விரும்பிய பேதுருவை அழைக்கின்றார். ஒரு சமயத்தில் பேதுரு நம்பிக்கை இழந்து இறைக்கரம் நாடுகின்ற போது தன் கரம் நீட்டிக் காக்கின்றார்.

நம் வாழ்வில் எத்தனை முறை இறைவனின் உடனிருப்பை உணராமல் வாழ்ந்திருக்கின்றோம்? சிந்திப்போம். இறைவனில் நம்பிக்கை கொண்டு துணிச்சலாய் வீறுநடை போட்டாலும் வீழ்ச்சி என்று வரும் சமயத்தில் நாம் கொண்டுள்ள இறை நம்பிக்கையை இழக்கின்றோம்; இறைக்கரம் நாடுகின்றோம். இறைவன் நம்மோடு கூடவே பயணிக்கிறார் என்பதை மறந்து, நமது மனித பலவீனத்தினால் வீழ்கின்றோம்.

வாழ்க்கை என்ற இலட்சியப் பயணத்தில், வீழ்ச்சிகளில் வீழ்ந்து விடாமல் இறைக்கரம் பிடித்து துணிச்சலோடு வெற்றி நடை போடுவோம். நம்மைக் காக்கும் இறைவன் கண்ணயர்வதுமில்லை, உறங்குவதுமில்லை என்ற ஆழ்ந்த நம்பிக்கை கொண்டு தூயவன் துணை கொண்டு தொடர்ந்து பயணிப்போம்.

## இறைமக்களின் மன்றாட்டுகள்:

***பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.***

1. நம்பிக்கை இழந்த பேதுருவை கரம் நீட்டிக் காத்தவரே எம் இறைவா!

உமது திரு அவையை வழிநடத்தும் திரு அவைப் பணியாளர்களை ஆசீர்வதியும். உமது வல்லமையுள்ள இறைக்கரம் இவர்களோடு இருந்து உம் மக்களாகிய எங்களை தொடர்ந்து இறை வழியில் நடத்திச் செல்ல வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. நல் விளைவை நாடுகளுக்கு நல்குபவரே எம் இறைவா!

எம் பாரதத்தை ஆளும் ஆட்சியாளர்களை ஆசீர்வதியும். மக்களின் நலன்களைக் கருத்தில் கொள்ளாமல் சுய நலத்திலே வீழ்ந்து கிடக்கும் இவர்களை உமது இறைக்கரத்தினால் தூக்கிப் பிடித்து நாட்டு மக்களை நல் வழியில் நடத்திச் செல்ல வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. நல்லதையே எமக்கு அருள்பவரே எம் இறைவா!

பல்வேறு உடல், உள்ள நோய்களினால் வருந்துவோரை ஆசீர்வதியும். உமது குணமளிக்கும் அருட்கரம் இவர்களோடு இருந்து நோயின் எல்லா வேதனைகளிலிருந்தும் இவர்களை மீட்டெடுக்க வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. இயற்கையில் உறைந்திருக்கும் இறையே எம் இறைவா!

வான் மழையின்றி தரிசாகிப் போன எம் தமிழகத்தைக் கனிவுடன் கண்ணோக்கும். விவசாயம் இன்றித் தவிக்கும் விவசாயிகளின் அழுகுரலைக் கேட்டு, நல்லதொரு வான்மழையைப் பொழியச் செய்ய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**“கடவுள் அன்பாய் இருக்கிறார்!” 1 யோவா 04: 16**

மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

info.arulvakku@gmail.com; + 91 843 802 1938; www.arulvakku.com